கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)

(செப்ரம்பர்/ஒக்டோபர் 2010)

Eastern University, Sri Lanka
30 NOV 2010

# ECO 302 Applied Economics

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

---

01.(அ) அண்மைக் காலங்களில் உலக பொருளாதாரம் அடைந்து வரும் புதிய மாற்றங்களை இனங்கண்டு விளக்குக?

(08 புள்ளிகள்)

(ஆ) இத்தகைய மாற்றங்கள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஏற்படுத்திய தாக்கங்களை விஷேடமாக இலங்கையைக் கருத்தில் கொண்டு ஆராய்க?

(12 புள்ளிகள்)

02 (அ) புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளைப் பொறுத்தவரை இலங்கையின் அடைவுமட்டம் பற்றிய உமது கருத்துக்களை தெளிவுபடுத்துக?

(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் பத்தாண்டு கால அபிவிருத்திக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை அடைவதில் இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கும் பொதுவான சவால்களை தெளிவுபடுத்துக?

(10 புள்ளிகள்)

03.(அ) வறியவர்கள் சார்பான வளர்ச்சியை ஏற்படுத்துவதன் பொருட்டு, தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துக?

(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கை சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பில் ஏற்பட்டு வரும் துரித மாற்றங்களின் பின்னணியில் உள்ள காரணிகளை இனங்கண்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

04.(அ) தற்போது இலங்கையின் உள்நாட்டு விவசாயம் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகளை விபரிக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ) பெருந்தோட்டத்துறையில் கொண்டுவரப்பட்ட தனியார்மயமாக்கல் கொள்கையின் விளைவுகளை தெளிவுபடுத்துக?

(10 புள்ளிகள்)

05.(அ) "ஒரு பொருளாதாரத்தில் ஏற்படும் கட்டமைப்பு மாற்றங்கள் அக்கால கட்டத்தில் காணப்படும் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளை பிரதிநிதித்துவப் படுத்துபனவாக அமைந்திருக்கும்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கைப் பொருளாதாரத்தில் 1977இன் பின்னர் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட்ட முக்கியமான மாற்றங்களை பரிசீலிக்குக?

(10 புள்ளிகள்)

06.(அ) இலங்கையில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக நீர் கூறும் விதப்புரைகள் எவை?

(10 புள்ளிகள்)

(ஆ) நீண்டகால உள்நாட்டு யுத்தம் முடிவடைந்துள்ளமை இலங்கைப் பொருளாதாரம் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை நீர் எவ்வாறு மதிப்பிடுவீர்?

(10 புள்ளிகள்)

07.(அ) இலங்கையில் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் ஏற்படுத்தப்படுவதற்கு பின்னணியிலிருந்த காரணிகளை நியாயப்படுத்துக?

(10 புள்ளிகள்)

(ஆ) "சுதந்திரத்தின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட நிலச் சீர்திருத்தம் தொடர்பான பல நடவடிக்கைகள் உள்நாட்டு விவசாயத்தைக் காட்டிலும், பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் மீதே அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது." இக்கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடையை தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

08. பின்வருவன பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(அ) இலங்கையின் ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் கொள்கை

(ஆ) உலக பொருளாதார நெருக்கடியும், இலங்கையும்

(இ) இலங்கையின் உள்நாட்டு யுத்த முடிவும் உல்லாசப்பயணத் துறையும்.

(ஈ) பொதுவாக்கப்பட்ட தீர்வை முன்னுரிமைத் திட்ட (GSP +) இழப்பும் இலங்கைப் பொருளாதாரமும்

(ஒவ்வொன்றுக்கும் 05 புள்ளிகள்)